## பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2019-2020

## மானியக் கோரிக்கை எண். 35


D. ஜெயக்குமார்

மீன் வளம், பணியாளர் மற்றும்

நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்



©



தமிழ்நாடு அரசு

2019

| வ. எண். | பொருள் | பக்க எண். |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் | 7 |
| 3 | தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம் | 12 |
| 4 | லோக் ஆயுக்தா | 16 |
| 5. | மாநில விழிப்புப் பணி ஆணையம் | 17 |
| 6. | ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயங்கள் | 18 |
| 7. | ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம் | 20 |
| 8. | ஆய்வுப் பிரிவு | 22 |
| 9. | பயிற்சி | 24 |
| 10. | முடிவுரை | 34 |

# பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

# 2019–2020 – ஆம் ஆண்டிற்கான

# கொள்கை விளக்கக் குறிப்பு

## 1. முன்னுரை

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அத்தியாவசிய மனிதவள மேலாண்மை பணிகளான பணி நியமனம், பயிற்சி மற்றும் ஊக்குவித்தல் ஆகியவற்றை நிருவகிக்கிறது. இத்துறை அரசு ஊழியர்களின் பதவி உயர்வு, பணி மாறுதல் குறித்த பொதுவான வழிகாட்டுதல்கள் வெளியிடுவதுடன், ஒழுங்கு நடவடிக்கைகள் குறித்த அறிவுறுத்தங்களையும் வெளியிடுகிறது.

இத்துறை பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் (பயிற்சி) என இரண்டு அலகுகளாக பின்வரும் பணிகளை மேற்கொள்கிறது :–

அ. அறிவுரை வழங்கும் பணிகள்

தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள் மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தங்கள் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளபடி இத்துறை பின்வரும்

இனங்களில் தலைமைச் செயலகத் துறைகளுக்கு அறிவுரை வழங்குகிறது:

i. தமிழ்நாடு மாநிலப் பணிகள் மற்றும் தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணிகளில் அடங்கிய பல்வேறு பணியிடங்களுக்கான காலிப்பணியிட மதிப்பீடு மற்றும் அப்பணியிடங்களுக்கான தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் தயாரித்தல்.

ii. அரசுப் பணியாளர்களின் பணி வரன்முறைப்படுத்துதல் மற்றும் தகுதிகாண் பருவம் விளம்புதல் குறித்தான சிறப்பு விதிகள்/ தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016,– ஆகியவற்றின்படி அறிவுரை வழங்குதல்.

iii. அடிப்படை விதிகள் குறித்த தெளிவுரைகள் வழங்குதல்.

iv. பணி முதுநிலையை மாற்றியமைத்தல் குறித்த கருத்துருக்களை விதிக்கூறுகளின் படி ஆய்வு செய்தல்.

ஆ. <u>சட்டரீதியான பணிகள்</u>

1. பல்வேறு துறைகளில் பணிபுரியும் அனைத்து வகை மாநில அரசுப் பணியாளர்களின் (அகில இந்தியப் பணிகள் நீங்கலாக) பணி தொடர்பான பின்வரும் சட்டரீதியான பணி விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை நிருவகித்தல்:

   i. தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 [தமிழ்நாடு சட்டம் எண்.14/2016]

   ii. தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதிகள், 1973.

   iii. தமிழ்நாடு அரசு அடிப்படை விதிகள்.

   iv. தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள்,1955.

   v. தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955.

   vi. தமிழ்நாடு அமைச்சுப் பணிக்கான சிறப்பு விதிகள்.

   vii. தமிழ்நாடு அடிப்படைப் பணிக்கான சிறப்பு விதிகள்.

   viii. தமிழ்நாடு பொது சார்நிலைப் பணிக்கான சிறப்பு விதிகள்– இனம் XXII.

2. தலைமைச் செயலகம் தொடர்பான விதிகள்:

i. தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணிக்கான சிறப்பு விதிகள்.

ii. தமிழ்நாடு பொதுப்பணிக்கான சிறப்பு விதிகள் – இனம் XII மற்றும் XII–A.

iii. தலைமைச் செயலக அலுவலகக் கையேடு.

3. அரசமைப்பு மற்றும் சட்டரீதியான அமைப்புகள் தொடர்பான விதிகள்:

i. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகள், 1954.

ii. தமிழ்நாடு தகவல் பெறும் உரிமை (கட்டணம்) விதிகள், 2005.

iii. தமிழ்நாடு தகவல் ஆணைய (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012.

iv. தமிழ்நாடு மாநில தகவல் ஆணைய பணி விதிகள், 2017.

v. தமிழ்நாடு லோக்ஆயுக்தா சட்டம், 2018.

vi. தமிழ்நாடு லோக்ஆயுக்தா விதிகள், 2018.

4. அரசின் அலுவல் தொடர்பான விதிகள்

i. தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள் மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தங்கள்

ii. மாண்புமிகு முதலமைச்சரின் நிலை ஆணைகள்.

இ. <u>நிருவாகப் பணிகள்</u>

i. தலைமைச் செயலகத்தில் "ஓர் அலகு முறை"யின் (One Unit) கீழ்வரும் அரசு சார்புச் செயலாளர்களின் பணிநிலை வரையுள்ள அனைத்துப் பணியாளர்களின் பணி அமைப்பு.

ii. பணியாளர் சங்கங்களுக்கு அங்கீகாரம் அளித்தல் மற்றும் அரசுப் பணியாளர்களின் குறைகளை பரிசீலித்தல் .

iii. கீழ் காணும் அமைப்புகளுக்கான நிருவாகப் பணிகள் மற்றும் கட்டமைப்பு வசதிகள் அளித்தல் :

– தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்.

– தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம்.

– தமிழ்நாடு லோக்ஆயுக்தா.

– மாநில விழிப்புப் பணி ஆணையம்.

– ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம்.

– ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள்.

– பயிற்சித் துறை தலைவர் அலுவலகம்.

ஈ. <u>பயிற்சி</u>

– இளநிலை உதவியாளர்கள் / உதவியாளர்களுக்கு பவானிசாகர் குடிமைப்பணிகள் பயிற்சி நிலையத்தில் அடிப்படை பயிற்சி.

– தலைமைச் செயலகத்தில் புதிதாக பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களுக்கான அடிப்படைப் பயிற்சி

– மாவட்டத் தலைநகரங்களில் சிறப்புப் பயிற்சி .

– அண்ணா மேலாண்மை நிலையத்தில் மேலாண்மை மற்றும் ஆதார வளங்கள் குறித்த பயிற்சி.

– தலைமைச் செயலக உதவிப் பிரிவு அலுவலர்கள் மற்றும் பிரிவு அலுவலர்களுக்கான புத்தாக்க / பணியிடைப் பயிற்சி போன்ற பயிற்சிகள் அளித்தல்.

உ. <u>இதரப் பணிகள்</u>

i. அரசுப் பணியாளர்களின் நலன். அரசுப் பணியாளர்களின் குறை தீர்ப்பதற்காக உரிய வழிமுறைகளை வகுப்பதோடு அவர்களின் நலன் காக்கப்படுவதையும் உறுதிபடுத்திக்கொள்கிறது.

ii. மின் ஆளுகை

மின் ஆளுகையில், தகவல் தொழில் நுட்பத்தினை பயன்படுத்தி அரசின் சேவைகள் எளிமையாகவும் வெளிப்படைத் தன்மையுடன் பொதுமக்களுக்கு திறமையாக அளிக்கப்படுகிறது. மின் ஆளுகை தொழில் நுட்பத்தினை சிறப்பாகப் பயன்படுத்தும் பொருட்டு இத்துறையால் நிருவகிக்கப்படும் சட்டங்கள் மற்றும் விதிகள் ஆகியவற்றை அரசு வலைதளம் 'www.tn.gov.in' இல் காண வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2. **தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்**

இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 315(1)–ன் கீழ் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அமைக்கப்பட்டுள்ளது. இத்தேர்வாணையம், தலைவர் மற்றும் பதினான்கு உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின்

பணி நிபந்தனைகள் 1954–ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகளின்படி நிருவகிக்கப்படுகின்றன.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் பணியாளர்களைத் தேர்வு செய்யும் முதன்மை முகமையாகச் செயல்படுகிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவுக் கூறு 320–ல் குறிப்பிட்டுள்ளவாறு தேர்வாணையத்தின் மற்ற பணிகள் பின்வருமாறு:–

i. பணியாளர்களைத் தெரிவு செய்தல் பற்றிய விதிகளை இயற்றுவது, பணி நியமனம், பதவி உயர்வுகள் அளித்தல் மற்றும் ஒரு பணியிலிருந்து மற்றொரு பணிக்கு மாறுதல் செய்தல் ஆகியவற்றில் பின்பற்றப்பட வேண்டிய நெறிகளை வகுப்பது மற்றும் அரசுப் பணியாளர்களின் மீதான ஒழுங்கு நடவடிக்கைகளில் மேல்முறையீடு குறித்த அனைத்து நேர்வுகளிலும் அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.

ii. ஆண்டுக்கு இருமுறை துறைத் தேர்வுகளை நடத்துதல்.

iii. மத்திய அரசின் பாதுகாப்புத்துறை அமைச்சகத்தின் சார்பாக டேராடூன் இந்திய இராணுவக் கல்லூரிக்கான நுழைவுத் தேர்வு நடத்துதல்.

தேர்வு முறைகளில் முழு வெளிப்படைத்தன்மையினை உறுதி செய்திடவும், பணிநியமனம் நியாயமாகவும், நேர்மையாகவும் நடத்திடவும் ஒவ்வொரு கட்டத்திலும் பல்வேறு புதிய சீர்திருத்தங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடைமுறைப்படுத்தியுள்ளது. அவையாவன;

i. விண்ணப்பதாரர்கள் எதிர்வரும் தேர்வுகளுக்குத் தங்களை முன்னதாகத் தயார் செய்து கொள்ள ஏதுவாக, ஒவ்வொரு ஆண்டும் போட்டித் தேர்வுகளுக்கான திட்ட அட்டவணையை ஆண்டின் தொடக்கத்திலேயே வெளியிடுகிறது.

ii. பயன்பாட்டிற்கு எளிய முறையில், இணையதளம் வழியே அனைத்துத் தேர்வுகளுக்கும் விண்ணப்பித்தல்.

iii. "ஒருமுறை பதிவு வசதி"யானது ஐந்து ஆண்டுகளுக்கு செல்லத்தக்கதாகவும், அதற்குப் பின் புதுப்பிக்கக்கூடியதாகவும்

விண்ணப்பதாரர்கள் தொடர்பான விவரங்கள் அடங்கிய நிரந்தரத் தரவுதளமாகவும் விளங்குகிறது.

iv. அனைத்துத் தேர்வு மையங்களும் வலை நிழற்படக்கருவி (Web Camera) மூலம் ஒளிப்பதிவு மற்றும் கண்காணிப்பு செய்யப்படுகின்றன.

v. அனைத்துத் தேர்வு மையங்களிலும் மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரர்கள் தரைத் தளத்திலேயே தேர்வு எழுதுவதற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. தேவைப்படின் அவர்களுக்கு உதவியாளர்களும் (Scribes) அளிக்கப்படுகின்றனர்.

vi. தேர்வு முடிவடைந்த பின்னர் கொள்குறி வகையைச் (objective–type) சார்ந்த தேர்வுகளுக்கான விடைகள் உடனடியாக தேர்வாணையத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டு வருகிறது. தேர்வாளர்களுக்கு இவ்விடைகள் குறித்து ஏதேனும் மறுப்பு இருப்பின் அது குறித்த கோரிக்கைகளை ஏழு நாட்களுக்குள் தேர்வாணையத்திற்கு தெரிவிக்க கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

vii. விரிவான விடையளித்தல் வகை விடைத்தாளினை தேர்வாணைய அலுவலகத்தில்

பார்வையிட தேர்வாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

viii. காலிப்பணியிடங்கள் குறித்த விவரங்கள் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டு, அலகு / பணி ஒதுக்கீட்டிற்கு கலந்தாய்வு முறை பின்பற்றப்பட்டு வருகிறது.

ix. தேர்வுகளை விரைவாகவும், நேர்மையாகவும் நடத்தி, முடிவுகளை வெளியிட கணினி வழித் தேர்வுகளை தொழில்நுட்பப் பணிகளுக்கான தெரிவுகளில் தேர்வாணையம் அறிமுகப்படுத்தி உள்ளது.

x. தேர்வர்கள், தேர்வாணையத்திற்கு நேரடியாக வருவதை தவிர்க்கும் பொருட்டு, அவர்களின் சான்றிதழ்கள் பொதுச் சேவை மையங்கள் வழியாக பதிவேற்றம் செய்யப்பட்டு 'சான்றிதழ் சரிபார்ப்பு' மேற்கொள்ளப்படுகிறது.

தேர்வாணையத்தின் ஆண்டறிக்கை இத்துறையால் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுகிறது.

**சாதனைகள்**

கடந்த இரண்டாண்டுகளில் (ஜனவரி, 2017 முதல் மே, 2019 வரை) தொகுதி - I மற்றும் IIA பணிகளில் அடங்கிய பதவிகளுக்கும், இளநிலை உதவியாளர், கிராம நிர்வாக அலுவலர், வட்டார சுகாதார புள்ளியியலாளர், உதவி வேளாண்மை அலுவலர், உதவி சிறை அலுவலர் உள்ளிட்ட பல்வேறு பணியிடங்களுக்கு 22,250 நபர்களை தேர்வாணையம் தெரிவு செய்துள்ளது.

2018–2019 நிதியாண்டில் 17,648 நபர்களை தெரிவு செய்துள்ள தேர்வாணையத்தின் செயல்பாடு, ஓராண்டில் தெரிவு செய்யப்பட்ட அதிகபட்ச எண்ணிக்கையாகும்.

**3. தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம்**

தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம், தலைமைத் தகவல் ஆணையர் ஒருவரையும் மற்றும் ஆறு தகவல் ஆணையர்களையும் கொண்டதாகும். தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்துதல் மற்றும் அச்சட்டத்தில் வகுத்துரைக்கப்பட்ட பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவை இவ்வாணையத்தின் கடமைகளாகும்.

பொது அதிகார அமைப்பு எதனாலும் அல்லது அதன் கட்டாளுகையின் கீழ் உள்ள தகவல் எவ்வடிவில் இருந்தாலும் அவற்றை தாளிலோ அல்லது மின்னணு பதிவு முறையிலோ அல்லது மாதிரிகளாக வைத்திருக்கப்படுவதை குடிமகன் எவரொருவரும் தான் விரும்பும் தகவலை கோரவோ, பார்வையிடவோ அல்லது பெறவோ தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 உரிமையளிக்கிறது. மேலும் அக்குடிமகன் பணிகளையோ, ஆவணங்களையோ அல்லது பதிவுருக்களையோ பார்வையிடவும் செய்யலாம்.

இரண்டாம் மேல் முறையீடு ஆணையத்தில் செய்வதற்கு தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறை) விதிகள் 2012–இல் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தகவல் பெறுவதை எளிதாக்கும் வகையில் பொது அதிகார அமைப்பு ஒவ்வொன்றும் அதன் பதிவுருக்கள் அனைத்தையும் உரிய வகையில் வரிசைப்படி தொகுத்து பட்டியலிட்டு பேணி வருவது இச்சட்டத்தின்படி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மேலும் அதன் அமைப்பு, செயற்பணிகள், கடமைகள் மற்றும் இதர விவரங்களையும் தாமாகவே முன்வந்து வெளியிடுதல் வேண்டும்.

தமிழ்நாடு தகவல் பெறும் உரிமை (கட்டணம்) விதிகள், 2005 இல் விண்ணப்பம் சமர்ப்பிக்க மற்றும் அதனை தொடர்ந்து ஆவணங்களின் நகலைப் பெற அல்லது பார்வையிட செலுத்த வேண்டிய கட்டணம் ஆகியவைகள் குறித்து விவரிக்கப்பட்டுள்ளன. வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து கட்டணம் ஏதும் பெறப்படத் தேவையில்லை.

மாநில தகவல் ஆணையத்தின் ஆண்டறிக்கை இத்துறையால் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுகிறது.

**சாதனைகள்:**

அ. பார்வைக் குறைபாடு உடையவர்களிடமிருந்து குறிப்பான கோரிக்கை பெறப்பட்டால் ஆணையத்தின் முடிவுகள் / ஆணைகளை, பார்வையற்றவர்களுக்கான பிரெய்லி அச்சு எழுத்து முறையில் அவர்களுக்கு தேசிய பார்வையற்றோருக்கான சென்னை மண்டல மையத்துடன் இணைந்து வழங்கப்படுகிறது. இத்தகு வசதி நாட்டிலேயே முதன்முதலாக அளிக்கப்படுவதாகும்.

ஆ. அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் மாநிலத் தகவல் ஆணையர்கள் இரண்டாவது மேல்முறையீடு மற்றும் புகார்களை விசாரணை செய்து வருகின்றனர்.

இ. வலைதளம் மூலமாக இரண்டாவது மேல்முறையீடு செய்ய தகவல் ஆணையம் , ஆகஸ்ட், 2018 முதல் வழிவகை செய்துள்ளது.

ஈ. மாநிலத் தகவல் ஆணையத்தின் வலைதளத்தில் வழக்கு விவரப் பட்டியல் மற்றும் இரண்டாவது மேல்முறையீட்டின் மீதான ஆணையத்தின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

தகவல் பெறும் உரிமை வாரம் ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதத்தில் கொண்டாடப்பட்டு வருகிறது. 2018–ஆம் ஆண்டுக்கான தகவல் பெறும் உரிமை வாரம் மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களின் தலைமையில் கொண்டாடப்பட்டது.

நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளின் (Sustainable Development Goals) அடிப்படையில் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழான மனுக்கள் மீது துரித நடவடிக்கை மேற்கொள்வது மற்றும் இது குறித்த பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துவது ஆகியவை இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், லோக் ஆயுக்தா, மாநில விழிப்புப் பணி ஆணையம் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள் போன்ற அமைப்புகள் மூலமாக ஊழல் மற்றும் லஞ்ச ஒழிப்பிற்கான முனைப்பான நடவடிக்கைகளும் இத்துறையால் மேற்கொள்ளப் படுகின்றன.

## 4. லோக்ஆயுக்தா

தமிழ்நாடு லோக்ஆயுக்தா சட்டம், 2018, சில பொது ஊழியர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் குறித்து விசாரிக்க 'தமிழ்நாடு லோக்ஆயுக்தா' என்ற அமைப்பை நிறுவும் பொருட்டு இயற்றப்பட்டது.
அரசு நிருவாகத்தில் தூய்மை, வெளிப்படைத் தன்மை மற்றும் ஆளுகையில் பொறுப்புடைமை ஆகியவற்றை உறுதி செய்தல் இச்சட்டத்தின் நோக்கங்களாகும்.

தமிழ்நாடு லோக்ஆயுக்தா விதிகள் 2018-இல், இவ்வமைப்பின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை, தேடுதல் குழுவின் உதவியுடன் தேர்வுக் குழு தேர்வு செய்வதற்கு உரிய வழிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு லோக்ஆயுக்தாவின் தலைவர், உறுப்பினர், அதிகாரிகள் மற்றும் அலுவலர்களின் பணி நிபந்தனைகள் பற்றியும் இவ்விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தலைவர் மற்றும் இரு நீதித்துறை உறுப்பினர்கள் பதவி பொறுப்பேற்று தமிழ்நாடு லோக்ஆயுக்தாவில் தற்போது பணியாற்ற துவங்கியுள்ளனர்.

## 5. மாநில விழிப்புப் பணி ஆணையம்

1965ம் ஆண்டு மாநில விழிப்புப் பணி ஆணையம் அமைக்கப்பட்டது. மாநில விழிப்புப் பணி ஆணையத்திற்கு உதவி புரியும் முக்கிய அமைப்பாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம் செயல்படுகிறது.

மாநில விழிப்புப் பணி ஆணையத்தின் செயல் அதிகாரங்களாவன:

(i) பொது ஊழியர் எவரேனும் நாணயமற்ற வகையில் நடந்துகொண்டார் அல்லது ஊழல் புரிந்துள்ளார் என குற்றம் சாட்டப்படுகிறபோது அல்லது சந்தேகப்படும் வகையில் நடந்துள்ளார் எனும்போது அந்நிகழ்வு குறித்து விசாரணை மேற்கொள்ளுதல்.

(ii) பொது ஊழியர் ஒருவர் தன்னுடைய அதிகாரத்தை தவறான அல்லது ஊழல் நோக்கத்திற்காக பயன்படுத்தியதாகவோ அல்லது உரிய முறையில் பயன்படுத்தாமை பற்றியோ கூறப்படும் புகார் மீது விசாரணை அல்லது புலனாய்வு மேற்கொள்ளுதல்.

(iii) தேவைப்படும் தகவல் அல்லது புள்ளி விவரங்களை சேகரித்தல்.

(iv) ஆணையத்தின் வரம்பிற்குட்பட்ட பொருட்கள் மற்றும் பரிந்துரைகளின் மீதான

நடவடிக்கைகள் குறித்து எந்தத் தகவல்களையும் எந்தத் துறையிலிருந்தும், அரசு நிறுவனத்திடமிருந்து அல்லது எந்த பொது ஊழியரிடமிருந்தும் பெறலாம்.

மாநில விழிப்புப் பணி ஆணையம் பின்வருவனவற்றின் மீது அதிகார வரம்புகளைக் கொண்டுள்ளது:

(i) தமிழ்நாடு அரசின் அனைத்து பொது / அரசு ஊழியர்கள்.

(ii) மாநில அரசின் அனைத்து சட்டபூர்வ அமைப்புகள், கழகங்கள் மற்றும் நிறுவனங்கள்.

(iii) பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள் உள்ளிட்ட அனைத்துப் பொது ஊழியர்கள்.

## 6. ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயங்கள்

மாநில அரசிலும், நகராட்சி நிருவாக அமைப்புகளிலும் பணிபுரிந்து வரும் அலுவலர்கள் மீது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையினரால் சுமத்தப்படும் சாட்டுரைகளை விசாரணை செய்ய ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயங்கள் உருவாக்கப்பட்டன.

தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955ன்படி ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயங்கள் விசாரணையை மேற்கொள்கின்றன.

தற்போது சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் ஆகிய நகரங்களில் ஆறு ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயங்கள், இந்திய ஆட்சிப்பணி அலுவலர்கள்/ மாவட்ட வருவாய் அலுவலர்கள் தலைமையில் இயங்கி வருகின்றன.

இத்தீர்ப்பாய ஆணையருக்கு வழக்கு விசாரணையில் ஒழுங்கு நடவடிக்கை வழக்கறிஞர்கள் (Prosecutors for Disciplinary Proceedings) உதவி புரிகின்றனர்.

இத்தீர்ப்பாயங்களின் விசாரணை அறிக்கையினை ஆணையர்கள் உரிய மேல்நடவடிக்கை தொடரும் பொருட்டு தொடர்புடைய அரசு நிருவாகத் துறைக்கு அனுப்பி வைக்கின்றனர்.

## 7. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம்

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் முக்கிய செயல்பாடுகள்:

i. ஊழல் மற்றும் அதனுடன் தொடர்புடைய தவறான நடத்தை குறித்த சாட்டுரைகளின் மீது விசாரணை மேற்கொள்ளுதல்.

ii. இயக்ககத்தால் சேகரிக்கப்படும் தகவல் மற்றும் புள்ளி விவரங்களை மாநில விழிப்புப் பணி ஆணையத்திற்கு தெரியப்படுத்துதல்.

iii. கையூட்டு மற்றும் ஊழல் முறைகேடுகளைக் கண்டறிவதற்காக நுண்ணறிவுத் தகவல்களை சேகரித்து, 1988–ஆம் ஆண்டு ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் அமையும் குற்றங்களை புலனாய்வு செய்தல்.

ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்குகளின் விசாரணையை விரைந்து மேற்கொள்ள ஏதுவாக சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, விழுப்புரம், சேலம், சிவகங்கை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் எட்டு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

"லஞ்சம் கொடுப்பதும், வாங்குவதும் குற்றம்" என்ற தகவலையும், ஊழல் குறித்த புகார்களை, இயக்ககத்தின் சென்னை அலுவலகத்தில் அல்லது உள்ளூர் அலுவலகங்களில் அளிக்கலாம் என்ற தகவலையும், தமது அலுவலகத்தின் தகவல் பலகையில் அனைவரின் பார்வையில் படுமாறு வைத்திடவும், அவர்களது அலுவலக இணையதளத்தில் பதிவேற்றம் செய்திடவும் அரசு அறிவுரைகளை வழங்கியுள்ளது.

கரூர், திருவள்ளூர், திருவாரூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் நான்கு புதிய பிரிவு அலுவலகங்கள் உருவாக்கப்பட்டதனால் தற்போது அனைத்து மாவட்டங்களும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் பிரிவு அலுவலகங்களைக் கொண்டுள்ளது.

நவீனமயமாக்குதலின் அங்கமாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் தலைமை அலுவலகத்தில் ஒரு இணையதளக் குற்றங்கள் ஆய்வுக் கூடம் மற்றும் விசாரணைக் கூடம் அமைக்கப்படவுள்ளது.

பொது வாழ்வில் தூய்மை குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த சென்னை வர்த்தகப் பொருட்காட்சியில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம் ஒரு காட்சி அரங்கு அமைத்து வருகிறது.

## 8. ஆய்வுப் பிரிவு

அரசு அலுவலகங்களில், நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தவும், திறனை அதிகரிக்கவும், தாமதங்களைத் தவிர்க்கவும், தலைமைச்செயலகத் துறைகள், துறைத் தலைமை அலுவலகங்கள் மற்றும் மாநகராட்சி அலுவலகங்கள் ஆகியவற்றை காலமுறையில் முழுமையாக ஆய்வு செய்யும் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

வருடாந்திர ஆய்வுத் திட்ட நிகழ்ச்சி நிரல்களின்படி, அரசு துணைச் செயலாளர் / மாவட்ட வருவாய் அலுவலர் நிலையிலுள்ள ஆய்வு அலுவலர்களால் ஆய்வு நடத்தப்படுகிறது.

ஆய்வுக்குப் பிறகு, முதனிலை ஆய்வுக் குறிப்புகள் தயார் செய்யப்பட்டு, அதன்மீது குறைநீக்கு அறிக்கை அளிப்பதற்காக தொடர்புடைய தலைமை அலுவலகத்திற்கு வழங்கப்படுகிறது. மூத்த இந்திய ஆட்சிப்பணி அலுவலர்களால் இறுதி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அளிக்கப்படும் பொதுக்குறிப்பு, தொடர் நடவடிக்கை எடுப்பதற்காக சம்பந்தப்பட்ட தலைமைச் செயலகத் துறைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

ஆய்வுப் பிரிவு, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து இரண்டாம் நிலை அலுவலர்களுக்கு இரண்டு நாட்களுக்கு ஒழுங்கு நடவடிக்கை குறித்த முன்னோடிப் பயிற்சியினையும், கண்காணிப்பாளர் மற்றும் மேலாளர்களுக்கு மூன்று நாட்களுக்கு அலுவலக நடைமுறை குறித்த குறுகிய காலப் பயிற்சியினையும் நடத்தி வருகிறது. இப்பயிற்சி வகுப்புகள் ஒவ்வோர் ஆண்டும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில் நடத்தப்படுகின்றன. 2018-2019 ஆம் ஆண்டில், 29 புத்தாக்கப் பயிற்சிகளும் 31 முன்னோடி மற்றும் குறுகிய காலப் பயிற்சிகளும் மார்ச் 2019 வரை நடத்தப்பட்டுள்ளன.

மாவட்ட ஆய்வுக்குழுக்கள், துணை ஆட்சியர் நிலையில் உள்ள மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் தலைமையில், வட்டாட்சியர் நிலையில் உள்ள துணை ஆய்வுக்குழு அலுவலர்களின் உதவியுடன் மாவட்ட அளவிலான அலுவலகங்களில், ஆண்டாய்வுகள் மற்றும் திடீர் ஆய்வுகளை மேற்கொள்வதுடன், அந்தந்த மாவட்ட விழிப்புப்பணி மற்றும் ஊழல் தடுப்புக்குழு மேற்கொள்ளும் திடீர் ஆய்வுகளுக்கும் உதவியாக இருக்கின்றன. 2018-2019 ஆம் ஆண்டில் 11 மாவட்ட ஆய்வுக் குழுக்கள், 122 ஆண்டாய்வுகள் மற்றும் 2742 திடீர் ஆய்வுகளை மேற்கொண்டதுடன், விழிப்புப்பணி மற்றும்

ஊழல் தடுப்புக்குழு அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து மாவட்ட ஆட்சித் தலைவர்களின் முன்னிலையில் 112 கண்காணிப்புக் கூட்டங்களையும் நடத்தியுள்ளன.

மாவட்டங்களின் அனைத்து அரசுத் துறைகளில் பணியாற்றும் இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளர்களுக்கு ஆண்டுதோறும் மாவட்டத் தலைமையகங்களில் ஐந்து நாட்கள் புத்தாக்கப் பயிற்சியும் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்களால் வழங்கப்பட்டு வருகிறது.

## 9. பயிற்சி

### I. தலைமைச் செயலகப் பயிற்சி நிலையம்

இப்பயிற்சி நிலையத்தில் நேரடி நியமனம் மூலம் தலைமைச் செயலகத் துறைகளில் பணியமர்த்தப்பட்ட உதவிப் பிரிவு அலுவலர்கள், நேர்முக உதவியாளர்கள், உதவியாளர்கள், நேர்முக எழுத்தர்கள் மற்றும் தட்டச்சர்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சி நிலையம் 2019, மே மாதம் வரை 97 அணிகளுக்கு பயிற்சி அளித்துள்ளது.

தலைமைச் செயலகத்தில் உள்ள பிரிவு அலுவலர்களுக்கு துறை சார்ந்த பல்வேறு சட்ட மற்றும்

விதிகளில் 'பணியிடைப் பயிற்சி' அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சி நிலையம் 2018, நவம்பர் வரை 23 அணிகளுக்கு பயிற்சி அளித்துள்ளது. இப்பயிற்சி பணியில் உள்ள மற்றும் ஓய்வு பெற்ற அலுவலர்கள் மூலம் அளிக்கப்பட்டு வருகிறது.

## II.பயிற்சித் துறைத் தலைவர் அலுவலகம்

அண்ணா மேலாண்மை நிலையத்தின் இயக்குநர் அலுவல் வழி பயிற்சித் துறை தலைவர் ஆவார். அவரின் கட்டுப்பாட்டின் கீழ் (i) 'அ' மற்றும் 'ஆ' அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சி நிலையம்(ii) அகில இந்திய குடிமைப் பணிகள் தேர்வு பயிற்சி மையம் (iii) போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையம் மற்றும் (iv) குடிமைப் பணிகள் பயிற்சி நிலையம் ஆகியவை அமைந்துள்ளன.

நல்ஆளுமை விருதிற்கான விண்ணப்பங்களைப் பெற்று அவற்றை பரிசீலனை செய்து, தகுதியான விண்ணப்பங்களை ஆய்வு குழுவிற்கும் மற்றும் தேர்வுக் குழுவிற்கும் அனுப்பி வைப்பது பயிற்சித் துறை தலைவரின் பணிகளாகும்.

i) "அ" மற்றும் "ஆ" அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சி நிலையம்

மாவட்ட வருவாய் அலுவலரால் நிருவகிக்கப்பட்டு வருகின்ற அடிப்படை பயிற்சி நிலையத்தில்,

பல்வேறு துறைகளைச் சார்ந்த "அ" மற்றும் "ஆ" அலுவலர்களுக்கு, பணி விதிகளில், அடிப்படைப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இந்த அடிப்படைப் பயிற்சி 2018–2019–ஆம் ஆண்டில் 309 நபர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

ii) அகில இந்தியக் குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையம்

இம்மையத்தில், மத்திய பணியாளர் தேர்வாணையத்தால் குடிமைப் பணி நாடுபவர்களுக்கு நடத்தப்படும் குடிமைப் பணித் தேர்வுகளுக்கான முதனிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு மற்றும் ஆளுமைத் தேர்வுக்கான பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் டிசம்பர் முதல் ஜூன் மாதங்களில் நடத்தப்படும் ஆறு மாத கால குடிமைப் பணிகளுக்கான முதனிலைத் தேர்விற்கான பயிற்சி வகுப்புகளில் சேர்க்கைக்காக நாளிதழ்களில் விளம்பரம் செய்து இணையதளம் வழியாக விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு 345 நபர்கள் (225 முழு நேரம், 100 பகுதி நேரம், 20 மீனவ சமுதாயத்தினர்) 24 மையங்களில் நுழைவுத் தேர்வு நடத்தி அனுமதிக்கப்படுகின்றனர்.

முதனிலைத் தேர்வில் வெற்றி பெற்ற 225 மாணவர்களுக்கு இப்பயிற்சி மையத்தில் ஒவ்வொரு ஆண்டும் முதன்மைத் தேர்விற்கு மூன்று மாத (ஜூலை – அக்டோபர்) முனைப்பான பயிற்சி பெற

அனுமதிக்கப்படுகின்றனர். முதன்மைத் தேர்விற்கு பயிற்சி பெறும் மாணவர்களுக்கு புத்தகங்கள்/கையேடுகள் வாங்கும் பொருட்டு வருமான உச்ச வரம்பின்றி மாதம் ஒன்றிற்கு ரூ.3000/– வீதம் மூன்று மாதங்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

மத்திய பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் ஆளுமைத் தேர்வை எதிர்கொள்ளும் வகையில் இம்மையம் மாணவர்களுக்கு சிறப்பான மாதிரி தேர்வை சிறந்த வல்லுநர்களைக் கொண்டு நடத்துகிறது. ஆளுமைத் தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு புதுடில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் சலுகை கட்டணத்தில் தங்கி தேர்வில் கலந்து கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது. இத்துடன், ஆளுமைத் தேர்வில் கலந்துகொள்ள செல்லும் மாணவர்களுக்கு இடைநிகழ்வு செலவிற்காக ரூ.2000/– வழங்கப்படுகிறது. 2018ஆம் ஆண்டு நடைபெற்ற முதன்மைத் தேர்வில் இம்மையத்தில் பயிற்சி பெற்ற 21 நபர்கள் அகில இந்திய குடிமைப் பணிகளுக்கான தேர்வில் தேர்ச்சிப் பெற்றுள்ளனர்.

இம்மையத்தில் குளிர்சாதன வசதி செய்யப்பட்ட வகுப்பறைகள், 25,000 புத்தகங்களைக் கொண்ட நூலகம், கலையரங்கம், கணினி அறை, செய்தித்தாள்கள் மற்றும் தொலைக்காட்சி

வசதியுடனான படிக்கும் அறை மற்றும் வளாகம் முழுவதும் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் இலவச வை–பை (Wi–fi) வசதிகளுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 100 பகுதிநேர மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு வந்த பயிற்சிக் கட்டணம் தள்ளுபடி செய்யப்பட்டதுடன் அம்மாணவர்களுக்கு உணவக வசதியும் 2018–2019 ஆம் ஆண்டு முதல் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இம்மையம் ஏழு மாற்றுத்திறனாளிகளுக்கு முழுநேர பயிற்சியும், மூன்று மாற்றுத்திறனாளிகளுக்கு பகுதிநேர பயிற்சியும் வழங்கி வருகிறது. மாற்றுத்திறனாளி குடிமைப் பணி ஆர்வலர்களுக்கு பயனளிக்கும் சாய்தளப்பாதை, சக்கர நாற்காலிகள் போன்ற வசதிகளுடன் பிரெய்லி பலகை மற்றும் தட்டச்சுப் பொறி, திரை பெரிதாக்கும் கருவி போன்ற கருவிகளையும் இம்மையம் அவர்களுக்கு அளிக்கின்றது.

அண்ணா நூற்றாண்டு குடிமைப் பணிகள் பயிற்சி மையங்கள், மதுரை காமராஜர் பல்கலைக்கழக வளாகத்திலும் மற்றும் பாரதியார் பல்கலைக்கழக வளாகத்திலும் செயல்படுகின்றன. இம்மையங்கள், அருகாமையிலுள்ள மாவட்டங்களைச் சார்ந்த குடிமைப்பணி நாடுபவர்களுக்கு குடிமைப் பணிகள் முதனிலைத் தேர்வுக்கு பயிற்சி அளிக்கின்றன.

iii) போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையம்

பணியாளர் தேர்வு ஆணையம், இரயில்வே தேர்வு வாரியம், வங்கிப் பணியாளர் தேர்வு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் போன்ற முகமைகள் நடத்தும் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையம் சென்னை பழைய வண்ணாரப்பேட்டையில் சர் தியாகராயா கல்லூரி வளாகத்தில், 04.01.2018 முதல் இயங்கி வருகிறது. இப்பயிற்சி நிலையத்திற்கான மாணவர்கள் சேர்க்கை பத்தாம் வகுப்பு இறுதித் தேர்வில் பெற்ற மதிப்பெண் மற்றும் இடஒதுக்கீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.

இம்மையம் ஒரு அணிக்கு 500 மாணவர்கள் என்ற விகிதத்தில் பயிற்சி அளிக்கிறது. இதுவரை 1,982 நபர்கள் இம்மையத்தில் பயிற்சி பெற்றுள்ளனர். தமிழ் மற்றும் ஆங்கிலம் தவிர 13 பிற தேர்வு நோக்குடைய பாடப் பொருட்களிலும், இம்மையத்தில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. மாதிரித் தேர்வுகள் குறிப்பிட்ட கால இடைவெளியில் நடத்தப்படுகின்றன. நூலகம் மற்றும் செய்தித் தாள்கள் / பத்திரிக்கைகள் மற்றும் வினா வங்கி வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பயிற்சி கையேடுகள்/ புத்தகங்கள் ஒவ்வொரு மாணவர்களுக்கும் ரூ.1000/– அளவில் இலவசமாக வழங்கப்படுகிறது.

iv) குடிமைப் பணிகள் பயிற்சி நிலையம், பவானிசாகர்

பவானிசாகர் குடிமைப் பணிகள் பயிற்சி நிலையத்தில் தமிழ்நாடு அமைச்சுப்பணி மற்றும் தமிழ்நாடு நீதித்துறை அமைச்சுப்பணி ஆகியவற்றில் அடங்கிய பல்வேறு பதவிகளுக்கான அடிப்படைப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

தற்போது ஒரே நேரத்தில் இப்பயிற்சி நிலையத்தில் 685 பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. எட்டு வகுப்பறைகள், கலையரங்கம், காணொளிக்காட்சி அரங்கம், நூலகம், உள் விளையாட்டரங்கம், ஐந்து புதிய தங்கும் விடுதிகள், பல்நோக்கு அரங்கம் போன்ற வசதிகள் இப்பயிற்சி நிலையத்தில் உள்ளன.

## III. அண்ணா மேலாண்மை நிலையம்

தமிழ்நாடு சங்கங்களின் பதிவு சட்டம் 1975ன் கீழ் பதிவு செய்யப்பட்ட, மாநில நிருவாக பயிற்சி நிலையமாக திகழும் அண்ணா மேலாண்மை நிலையம் மாநிலத்தின் தலைமை பயிற்சி நிறுவனமாக திகழ்கிறது. இந்நிலையம் குளிர்சாதனம் செய்யப்பட்ட வகுப்பறைகள், கணிப்பொறி மையம் மற்றும் 200 இருக்கைகளுடன் கூடிய கலையரங்கம் ஆகியவற்றை கொண்டுள்ளது.

இப்பயிற்சி நிலையம் அரசு ஊழியர்களுக்கு, தற்போதைய நிர்வாக மேம்பாடுகள் குறித்து தங்களது

திறனை காலத்திற்கு ஏற்றவாறு மேம்படுத்திக்கொள்ள பலதரப்பட்ட பொருட்களில் பயிற்சி அளிக்கிறது. அகில இந்திய பணி அலுவலர்களும் பலதரப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகளுக்காக இந்நிலையத்திற்கு மத்திய அரசால் அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

2018–2019 ஆம் ஆண்டில் இந்த நிலையம் மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம் உள்ளிட்ட மண்டல பயிற்சி நிலையங்களில் அளிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகளையும் சேர்த்து 15,742 பங்கேற்பாளர்களுக்கு 455 பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளது.

இந்நிலையம் பொது மேலாண்மை தலைப்பில் மட்டுமல்லாது நல்ஆளுமை, மனித உரிமைகள், பாலின விழிப்புணர்வு, பேரிடர் மேலாண்மை, தகவல் பெறும் உரிமைச் சட்டம், நகர வடிவமைப்பு மற்றும் மேலாண்மை, அரசுப் பணிகளில் முழு தரமேலாண்மை, மின் ஆளுமை மற்றும் வலைதள பாதுகாப்பு, வழக்கு மேலாண்மை, குடிமக்களை மையப்படுத்திய நிர்வாகம், ஒப்பந்த நடைமுறைகள் மற்றும் ஒப்பந்த விதிகள், மென்திறன், பணிமூப்பிற்கு முந்தைய ஆலோசனைகள் மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி போன்ற தலைப்புகளில் தேர்ந்த மற்றும் பயிற்சி பெற்ற பயிற்றுநர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கிறது. இதனுடன் பல்வேறு துறைகள் மற்றும் நிறுவனங்களுக்கு

அவற்றின் தேவைக்கேற்ப பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

**நிலையத்தால் 2018–2019 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட சிறப்பு நிகழ்ச்சிகள்**

1. தலைமைச் செயலகப் பணியாளர்களுக்கு பல்வேறு பிரிவுகள் குறித்து அறிமுகப்படுத்தும் பொருட்டு 460 பணியாளர்கள் 10 வெவ்வேறு தலைப்புகளில் பயிற்சி பெற்றனர்.
2. இந்திய ஆட்சிப் பணி தகுதிகாண் பருவத்தினருக்கு 2018–2019 ஆம் ஆண்டில் பயிற்சி நடத்தப்பட்டது.
3. நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்த 250 பொறியாளர்களுக்கு திறன் மேம்பாட்டிற்கான பயிற்சி உலக வங்கி நிதியுதவித் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்டது.
4. கோயில் நிர்வாகம் மற்றும் பாரம்பரிய மேலாண்மை என்ற தலைப்பில் இந்து அறநிலையத் துறை அலுவலர்களுக்கு முதன் முறையாக இரண்டு நாட்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.
5. தலைமைச் செயலக நிதித் துறையின் சார்பு செயலாளர்களுக்காக இரு மாத கால வகுப்பறை பயிற்சி நவம்பர் முதல் டிசம்பர், 2018 வரை நடத்தப்பட்டது.

6. தலைமைச் செயலக பெண் பணியாளர்களின் மன எழுச்சி, உடல் திறன் மற்றும் தலைமைத்துவ பண்புகளை அதிகரிப்பதற்கான கருத்தரங்கங்கள் 14 அணிகளில் 1421 பெண் அலுவலர்களுக்காக நடத்தப்பட்டது.

**மண்டல நிலையங்களில் பயிற்சி நிகழ்ச்சிகள்**

மண்டல பயிற்சி நிலையங்கள் சேலம், திருச்சி மற்றும் மதுரையில் அமைக்கப்பட்டதன் பின்னர் அருகாமையிலுள்ள மாவட்டங்களிலுள்ள பல்வேறு அரசு துறைகளில் பணிபுரியும் அலுவலர்களுக்கு அவர்களின் மாவட்டத் தலைமையிடத்திலேயே பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த மூன்று மண்டல நிலையங்களும் அனைத்து தரப்பு பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கும் வகையில் 2018–2019 ஆம் ஆண்டில் 214 பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளன.

## 10. முடிவுரை

அரசு நிர்வாகம் சீராக செயல்படுவதை உறுதி செய்யும் பொருட்டு, அரசுப் பணியில் திறமையான பணியாளர்களை ஈடுபடுத்தி, அரசுப் பணியை அவர்கள் செவ்வனே ஆற்றுவதற்கான வலுவான அடித்தளம் அமைப்பதற்குத் தேவையான திறன் மேம்பாட்டு பயிற்சி அளிப்பதன் மூலம், மாநில

நிர்வாக இயந்திரத்தின் ஒரு தூணாக இத்துறை விளங்குகிறது.

**D. ஜெயக்குமார்,**

மீன் வளம், பணியாளர் மற்றும்

நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்.